**சுற்றறிக்கை இல: 35/01/005/0010/21**

2018 செத்தெம்பர் 29

**சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்**

**உந்து ஊர்திகள் மற்றும் அத்தியாவசியமற்ற நுகர்வோர் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள்**

2018 ஒத்தோபர் 01ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் பின்வருவன தொடர்பில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1. அத்தகைய நாணயக் கடிதங்கள் திறக்கப்படுகின்ற நேரத்தில் நாணயக் கடிதத்தினைத் திறக்கின்ற உரிமம்பெற்ற வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்ட இறக்குமதிப் பெறுமதியின் குறைந்தபட்சம் 200 சதவீத காசு எல்லையினை அத்தகைய நாணயக்கடிதங்கள் உள்ளடக்கியிருந்தாலன்றி, அட்டவணை "அ" இல் குறித்துரைக்கப்பட்ட பொருட்கள் தவிர (இணைக்கப்பட்டுள்ளது) உந்து ஊர்திகள் இறக்குமதிக்காக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் நாணயக் கடிதங்கள் திறக்கப்படலாகாது.

2. அத்தகைய நாணயக் கடிதங்கள் திறக்கப்படுகின்ற நேரத்தில் நாணயக் கடிதத்தினைத் திறக்கின்ற உரிமம்பெற்ற வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்ட இறக்குமதிப் பெறுமதியின் குறைந்தபட்சம் 100 சதவீத காசு எல்லையினை அத்தகைய நாணயக்கடிதங்கள் உள்ளடக்கியிருந்தாலன்றி, அட்டவணை "ஆ" இல் குறித்துரைக்கப்பட்ட பொருட்கள் இறக்குமதிக்காக (இணைக்கப்பட்டுள்ளது) உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் நாணயக் கடிதங்கள் திறக்கப்படலாகாது.

3. இச்சுற்றறிக்கையில் உள்ளடக்கப்படும் பொருட்களுக்கு பின்வரும் நிபந்தனைகளும் ஏற்புடையதாகும்.

4. மேற்குறித்த பொருட்கள் இறக்குமதியினை உள்ளடக்குகின்ற நடைமுறையிலுள்ள நாணயக் கடிதங்கள் தொடர்பில் பொருட்கள் மேலே 1 மற்றும் 2இல் விதந்துரைக்கப்பட்ட நியதிகள் மீதானவை தவிர அத்தகைய நாணயக் கடிதங்களின் பெறுமதியில் அதிகரித்தலெதுவும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் அனுமதிக்கப்படலாகாது.

5. இச்சுற்றறிக்கையின் மூலம் விதிக்கப்படும் குறைந்தபட்ச எல்லைத் தேவைப்பாட்டினை நிறைவுசெய்வதற்கு அத்தகைய வாடிக்கையாளர்களை இயலச்செய்கின்ற நோக்கத்திற்காக எவையேனும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் தமது இறக்குமதி வாடிக்கையாளர்களுக்கான முற்பணங்களை வழங்கலாகாது.

6. இச்சுற்றறிக்கைக்கு அமைவாக எல்லைத் தேவைப்பாடுகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன என்பதற்கு தொடர்புடைய விலைப் பட்டியலை வங்கிகள் புறக்குறிப்பீடு செய்ய வேண்டும்.

7. மேலதிக அறிவித்தல் கிடைக்கும் வரை இப்பணிப்புரையுடன் இணங்கியொழுகுமாறு வங்கிகள் வேண்டப்படுகின்றன. உந்து ஊர்திகள் இறக்குமதிக்கான நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள் மீதான 35/01/005/0010/20 ஆம் இலக்க சுற்றறிக்கை இத்தால் இரத்துச்செய்யப்படுகின்றது.

**பணிப்பாளர்**

**உள்நாட்டுத் தொழிற்பாடுகள்**

இந்தப் பணிப்புரையின் அட்டவணை அ இனை https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/laws/cdg/DOD_Circular_No_35_01_005_0010_21_e.pdf என்ற வெப்தளத்தில் கிடைக்கத்தக்கதாக இருக்கிறது.